**OS.No.** 250/2017

**PW**1 - லோகநாதன் த/பெ. தங்கராஜ்

நாள். 20.1.2023

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில்</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னுடைய பிராமாண பத்திரிக்கையில் எனக்காகயும் 1ம் வாதிக்காகவும சேர்ந்து சாட்சியம் அளிப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். 1ம் வாதி சார்பில் சாட்சியம் அளிப்பதற்காக ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த மனுவில் என்ன உத்தரவி பிறப்பிக்கப்பட்டது என்றால் அது தெரியவில்லை. பிரதிவாதிகளை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2ம் பிரதிவாதி 1981 லிருந்து என்னுடன் படித்தார். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியுடன் திருமணம் ஆனதிலிருந்து தெரியும்.

2. 3ம் பிரதிவாதியின் நிறுவனம் கூட்டாண்மை நிறுவனமாக எந்த வருடத்திலிருந்து தொடங்கப்பட்டது என்றால் 2008. 3ம் பிரதிவாதியின் நிறுவனமானது 2008 க்கு முன்பே 2007 ல் கூட்டாண்மை நிறுவனமாக தொடங்கப்பட்டது என்றால் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதி கோவிந்தராஜ், பழனிச்சாமி மற்றும் கனேஷ், நித்தியானந்தம் மற்றும் செந்தில் சேர்ந்து தலா 6 லட்சம் வீதம் முதலீடு செய்து 2007 ல் கூட்டாண்மை நிறுவனமாக தொடஙகப்பட்டது என்றால் சரியல்ல. 2007 ல் மற்றவர்கள் பணம் போடவில்லை எனபதல் நானும் கோவிந்தாஜ் மட்டும் பங்குதாரர் நிறுவனமாக தொடங்கினோம்.

3. நானும் கோவிந்தாஜ் ம் எப்போது தொடங்கினோம் என்றால் 2008 ஜனவரியில் தொடங்கினோம். நானும் கோவிந்தாஜ் ம் சேர்ந்து 200 8 ல் தொடங்கவி்ல்லை என்றாலும் மேற்படி என்னுடன் சேர்ந்து 6 நபர்களும் தான் தொடங்கினோம் என்றாலும் அதற்கான அசல் பத்திரம் என் கைவசம் உள்ளது என்றாலும் சரியல்ல. அவ்வாறு 6 நபர்களும் சேர்ந்து தொடங்கி விட்டு எங்களுக்குள் ஒத்து வராததால் எங்களுக்குள் சமமரசம் பேசி ஒப்புக்கொண்டு எனது மனைவி பெயரிலும் கோவிந்தராஜ் மனைவி பெயரிலும் 2007 ம் ஆண்டு கூட்டாண்மை நிறுவனம் 3ம் பிரதிவாதி பெயரில் தொடங்கப்பட்டது என்றால் சரியல்ல. 2007 ல் எனது

மனைவி பெயரிலும் கோவிந்தராஜ் மனைவி பெயரிலும் தொடங்கப்பட்ட கூட்டாண்மை பத்திரத்தின் அசலும் என்வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அதை கோயம்புத்தூர் மாவட்ட தொழில் ஆணையத்தில் பதிபு செய்து ரசீது பெற்றுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் 21.9.2007 தேதிய ஒப்புதல் அட்டையானதுகோயம்புத்தூர் மாவட்ட தொழில் ஆணையத்தில் பதிவு செய்ததற்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி ஒப்புதல் அ'டை பிரதிவாதி தரப்பில் பி.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்காக 1.9.2007 ல் லீஸ் டீட் வாடகை ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம் என்றால் ஆமாம். தயாரிப்பிணை 2008 ல் தான் ஆரம்பித்தோம்.

4. வாடகை ஒப்பந்தம் ஆனது என்னுடைய மனைவி பெயரில் உள்ளது என்றால் ஆமாம். வாடகை ஒப்பந்தம் நகல் பிரதிவாதி தரப்பில் பி.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் அட்டை மற்றும் வாடகை ஒப்பந்தம் வைத்து ஓரியண்டல் பேங் ஆப் காமர்ஸ் வங்கிக் கணக்கு எண் 0558131000336 ல் தொடங்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 1.2.2008 ல் 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரிலும் ஒரு கூட்டாண்மை பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்ாறல் ஆமாம். மேற்படி கூட்டாண்மை பத்திரத்தை வைத்து ஸ்டேட் பேங் ஆப் இந்தியா வங்கி கணக்கு எண் 30330861007 தொடங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வங்கி அதிகாரியை சாட்சியாக விசாரித்தால் கணக்கு துவங்குவதற்கு நாங்கள் ஒப்படைத்த வாடகை ஒப்பந்தத்தை தாக்கல செய்வார்கள் என்றால் ஆமாம்.

5. அதேபோல் விற்பனை வரி அலுவலகத்திலும் வாடகை ஒப்பந்தம் மற்றும் கூட்டாண்மை பத்திரம் நகலை தாக்கல் செய்து கணக்கு ஆரம்பிந்துள்ளோம் என்றால ஆமாம். கூட்டாண்மை பத்திரத்தில் பிரிவு 6ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் தினசரி வரவு செலவு கணக்கு களை நான் தான் பராமரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா 1ன் கீழ நான் தாக்கல் செய்துள்ள கூட்டாண்மை பத்திரததில் முதல் 3 பக்க முத்திரை தாள்களை தவிர அடுத்த 3 தாள்களை நான் மாற்றம் செய்து மேற்படி ஆவணத்தை மோசடியாகவும் போலியாகவும் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. கூட்டாண்மை பத்திரத்தில் பிரிவு 6ல்3ம் பிரதிவாதி நிறுவனத்தின் தினசரி வரவு செலவு கணக்கு களை நான் தான் பராமரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளதை மாற்றி அமைத்து 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் பராமரிப்பதாக மேற்படி ஆவணத்தை

மோசடியாகவும் போலியாகவும் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்தது வந்தார் என்ாறல் சரியல்ல. இங்குஇருந்து வெளிநாட்டு நிறுவனத்திற்காக வேலை பார்த்து வந்தார். 1ம் பிரதிவாதி கோவையிலிருந்து தினமும வந்து செல்ல முடியாது என்பதால் என் மீது இருந்த நண்பி்கையில் நான் கொடுத்த ஆவணங்களை கையெழுத்து செய்து வந்தார் என்றாலும் அவர் தினசரி கணக்கு வழக்குகளை பராமரிக்க வில்லை என்றாலும் சரியல்ல.

7. கூட்டாண்மை பத்தி்ரத்தில் இருந்த சரத்துக்கள் 6,7 மற்றும் 8 யை மோசடியாகவும் போலியாகவும் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மோசடியாக தயார் செய்யப்பட்ட வா.த.சா 1 யை வைத்து தான் வா.த.சா 2 யை உருவாக்கினோம் என்றால் சரியல்ல. வா.த.சா 1 ல் சாட்சிகளின் முகவரியையும் மோசடியாக உற்பத்தி செய்து உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அவ்வாறு மோசடியாக உருவாக்கிய பின்பு ஸ்டேட் பாங் ஆப் இந்திய ஓவர்சீஸ் வங்கியில் ஒரு வங்கி கணக்கு எண் 30326172014 ஆரம்பித்தோம் என்றால் மோசடியாக ஆவணங்களை உருவாக்கவில்லை பதிவு செய்யபட்ட கூட்டாண்மை பத்திரத்தை வைத்து வங்கிக் கணக்கு ஆரம்பித்தோம்.

8. மோசடியாக உருவாக்கப்பட்ட வா.த.சா 1 மற்றும் 2 யை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்ாறல் சரியல்ல. மேற்படி 2 பாரத் ஸ்டேட் பாங் வங்கில் அதிகாரிகளை விசாரித்தால் மோசடியாக ஆவணங்களை தயார் செய்து நான் வங்கிக் கணக்கு துவங்கியுள்ளது தெரியவரும் என்றால் சரியல்ல.

9. Director of bailor க்கு நான் கையெழுத்து செய்து கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி நிறுவன்தின் சார்பாக அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி ஒப்புதலுடன் தான் அனுப்பியுள்ளேன். 23.12.2011 மற்றும் 2.1.2012 தேதிய கடித நகல் பிரதிவாதி தரப்பில் பி.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் 25.8.2009 தேதிய கடிதம் ஸ்டேட் பாங் ஆப் வங்கிக்கு நான் அளித்தது என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி ஒப்புதல் பேரில் கொடுத்தேன் மேற்படி கடிதம் பிரதிவாதி தரப்பில் பி.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. என்னுடைய மனைவி 29.3.2016 ல் முதன்மை வங்கி அதிகாரிக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட மேற்படி கடிதம் பிரதிவாதி தரப்பில் பி.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடிதத்தின் என்னுடைய மனைவி கூட்டாண்மை நிறுவனத்திலுருந்து 26.12.2013 மற்றும் 17.6.2014 தேதியில் விலகியதாக உள்ளது என்றால் சரியல்ல. கம்பெனியின் போகவில்லை என்று தான் சொல்லப்பட்டது. அதில் போகவில்லை என குறிப்பிடவில்லை என்றாலும் left என்ற வார்த்தை தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும் சரியல்ல. கம்பெனியை விட்டு விலகவில்லை. மேற்படி கடித்தில் 3ம் பிரதிவாதி நிறுவாகத்தை எடுத்துக்கொள்ள சொல்லி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.த.சா 5ன் கீழ் அறிப்புஆனது 1ம் வாதி 3ம் பிரதிவாதி நிறுவனத்திலிருந்து விலகியதற்கான அறிவிப்புகாக தான் எடுத்துக்கொள்ளமுடியும் என்றால் சரியல்ல. பி.த.சா 5ன் கீழ் அறிவிப்பு அனுப்பிவிட்டு அதை மறைத்து இந்த அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. 1.2.2018 கூட்டாண்மை நிறுவனத்தின் வரவு செலவுகளை 2008 முதல் 2016 வரை நான் தான் பராமரித்து வந்தேன் என்றாலும் அதற்குரிய கணக்குகளை நான் தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஓம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.